இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 28-02-2024

# சதிகளை வெல்லும் சாதுர்யங்கள் - 1

சில நாட்களுக்கு முன்னால் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 'தினமலர்' நாளிதழுக்கு ஒரு பேட்டி கொடுத்திருந்தார். வேறு யாருக்கு கொடுப்பார்? அந்த நாளிதழ் அதற்கு இட்டிருந்த தலைப்பு, **'சாதுர்யம் இருந்தால் தமிழகம் சாதித்து கொள்ளலாமே!'** என்பது ஆகும்.

**'தமிழ்நாட்டில் இருந்து வரி வாங்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசும் சாதுர்யம் இருந்தால் சாதித்துக் கொள்ளலாமே'** என்று நமக்கும் கேட்கத் தெரியும்.

சுயமாய் நிதி உருவாக்கத் தெரியாததால் மாநிலங்களின் நிதியை ஜி.எஸ்.டி.யாகச் சுரண்டிக் கொழுக்கும் ஒன்றிய அரசின் நிதித் துறை அமைச்சராக இருப்பவரால், மாநில வரிகள் இல்லாமல் அரசை நடத்த முடியுமா? நடத்தத் தெரியுமா? பூண்டு சாப்பிடாத புத்திசாலியால், வெங்காயம் சாப்பிடாத அறிவாளியால் இது முடியுமா?

நிதி அமைச்சகப் பணியே நிதிப் பகிர்வுதான். இந்த அடிப்படையே தெரியாதவர் ஒன்றிய நிதி அமைச்சராக இருக்கிறார். அண்ணாமலைகள், ஆர்.என்.ரவிகள், நிர்மலா சீதாராமன்கள் போதாதா பா.ஜ.க.வின் ஒன்றரை அணா வாக்கு வங்கியை ஒழிக்க! அதற்குத்தான் உதவும் இந்தப் பேட்டிகள்!

தேர்தல் என்பதால் இவர்களை பேச வைக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் இவர்களை பேச வைக்காமல் இருப்பதுதான் அந்தக் கட்சிக்கு நல்லது என்ற அடிப்படையில் இருக்கிறது அந்தப் பேட்டி.

தூத்துக்குடி நிகழ்ச்சியில் இந்தப் பேட்டிக்கு மிகச் சரியான பதிலடி கொடுத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். **"உங்களிடம் சாதுர்யம் இருந்தால் நீங்கள் சாதித்துக் கொள்ளலாமே என்று மிக ஆணவமாக அவர் பேட்டி அளித்துள்ளார். இது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. எங்களிடம் சாதுர்யம் இருப்பதால் தான் இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கிக் காட்டி இருக்கிறோம்.தொழில் தொடங்குவதற்கு தமிழ்நாட்டை நோக்கி உலகப் புகழ் பெற்ற நிறுவனங்கள் வர என்ன காரணம்? எங்களது வளர்ச்சியைப் பார்த்துதானே வருகிறார்கள். அனைத்துத் துறையிலும் முதலிடத்தை நோக்கி முன்னேறிக் கொண்டு இருக்கிறது தமிழ்நாடு. இவரைப் போன்ற இடைக்காலத் தடைகளையும் தாண்டித்தான் இந்த வெற்றியை பெற்று வருகிறோம்."** என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

சட்டமன்றத்தில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சாதனைகளை முழுமையாகப் பட்டியலிட்டாரே! இவை அனைத்தும் பா.ஜ.க.வின் சதிகளை வென்ற சாதுர்யங்கள் தானே!

* இந்தியாவின் பொருளாதாரத்துக்கு 9 விழுக்காடு பங்கைத் தருவது தமிழ்நாட்டின் பொருளாதார வளமாக இருக்கிறது.

* இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

* ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24 விழுக்காடாக இருக்கும் போது - தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19 விழுக்காடாக இருக்கிறது.

* இந்திய அளவில் பணவீக்கமானது 6.65 விழுக்காடாக இருக்கும் போது - தமிழ்நாட்டில் அது 5.97 விழுக்காடாக இருக்கிறது. தேசிய சராசரியை விட தமிழ்நாட்டின் பணவீக்கம் கட்டுக்குள் இருக்கிறது.

* ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது.

* தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14 ஆவது இடத்தில் இருந்து 3 ஆவது இடத்துக்கு தமிழ்நாடு உயர்ந்து வந்துவிட்டது.

* கல்வியில் இரண்டாவது இடத்துக்கு தமிழ்நாடு வந்துவிட்டது.

* புத்தாக்கத் தொழில்கள் வரிசையில் தமிழ்நாடு முதலிடத்துக்கு வந்துவிட்டது. - இவை அனைத்தும் தமிழ்நாடு அரசின் சாதுர்யத்தால் அடைந்த சாதனைகள்தான். பா.ஜ.க. அரசின் சதிகளை வென்று அடைந்த சாதுர்ய சாதனைகள்தான்.

நிதிப்பற்றாக்குறை என்பது 3.5 விழுக்காட்டுக்குள் இருக்க வேண்டும். அந்த வரம்புக்குள்தான் தமிழ்நாடு அரசு இருக்கிறது. உள் கட்டமைப்புக்காக ஒரு மாநில அரசு எவ்வளவு செலவு செய்கிறது என்பது அந்த மாநிலத்தின் வளத்தைக் காட்டும். அந்த வகையில் கட்டமைப்புக்காக 47 ஆயிரம் கோடியைச் செலவு செய்யும் அளவுக்கு நிதி வளம் தமிழ்நாடு அரசுக்கு இருக்கிறது.

அதேபோல் மாநிலத்தின் வரி வருவாய் எப்படி இருக்கிறது என்பதும் அந்த மாநிலத்தின் நிதி வளத்தின் அடையாளம் ஆகும். நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் அவர்கள் அளித்துள்ள பேட்டியில் இதனை விளக்கிச் சொல்லி இருக்கிறார்.

**"நம்முடைய சொந்த வரி வருவாயில் 15 விழுக்காடு வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம். பத்திரப் பதிவுத் துறையில் அதிக வளர்ச்சி இருக்கும். மற்ற வரி வருவாயில் அதிகளவு நிதி வரும் என எதிர்பார்க்கிறோம். வணிக வரி, பத்திரப் பதிவுத் துறையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை வரும் நிதி ஆண்டில் நல்ல பலனைத் தரும்" என்று சொல்லி இருக்கிறார்.**

ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வானது 6.66 விழுக்காடாக இருந்து இப்போது 4.08 ஆக குறைந்து விட்டது. அதற்கு நிர்மலா சீதாராமன் பதில் சொல்ல வேண்டும்.

இரண்டு பெரும் வெள்ளம் காரணமாக நாம் கேட்ட 37 ஆயிரம் கோடியில் ஒரு பைசா கூட வரவில்லை. அதற்கு அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் சொல்லி இருந்தால் பாராட்டலாம்.

ஒன்றிய அரசிடம் இருந்து வரவேண்டிய மானியங்கள், நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கின்றன. அதற்கு அவர் நியாயமான காரணங்கள் சொல்லி இருக்க வேண்டும்.

**- தொடரும் -**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (27.02.2024) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 12 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 கோட்டாட்சியர் குடியிருப்புகள், 1 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், 1 வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு. 4 வட்டாட்சியர் குடியிருப்புகள், 13 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள். 1 கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் ஆகிய கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், சமூக பாதுகாப்பு திட்டம் (மு.கூ.பொ). ஆணையர், தாரேஸ் அகமது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் டாக்டர் எஸ். நடராஜன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## வருவாய் - பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில்

# ரூ.12.27 கோடி செலவில் கட்டப்பட்ட கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.28-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,நேற்று(27.02.2024) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 12 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 கோட்டாட்சியர் குடியிருப்புகள், 1 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், 1 வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, 4 வட்டாட்சியர் குடியிருப்புகள், 13 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள், 1 கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் ஆகிய கட்டடங்களைத் திறந்து வைத்தார்.

வருவாய்த்துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில் 3 கோடியே 6 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்; நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் 3 கோடியே 44 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு;

நாகப்பட்டினம் மாவட்டம் - வேதாரண்யம், தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஆகிய இடங்களில் 1 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோட்டாட்சியர் குடியிருப்புகள்;

புதுக்கோட்டை மாவட்டம் - அறந்தாங்கி, மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி, திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் 1 கோடியே 44 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வட்டாட்சியர் குடியிருப்புகள்;

செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமுர், லத்தூர் மற்றும் பம்மல், இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம், தேரிருவேலி மற்றும் காக்கூர் திருவள்ளூர் மாவட்டம் நேமம், வானகரம் மற்றும் வயலாநல்லூர் திருவாரூர் மாவட்டம் ஆவூர் மற்றும் கமலாபுரம், விழுப்புரம் மாவட்டம் நெமிலி, திருவண்ணாமலை மாவட்டம் பெருங்காட்டூர் ஆகிய இடங்களில் 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 13 குறு வட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள்;

தென்காசி மாவட்டம் - புன்னைவனத்தில் 15 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1 கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 12 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய்த் துறை கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கே. பிரபாகர், சமூக பாதுகாப்பு திட்டம் (மு.கூ.பொ), ஆணையர், தாரேஸ் அகமது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர் வே.ராஜாராமன், வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் டாக்டர் எஸ். நடராஜன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சுபா நந்தினி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஒன்றியச் செயலாளர் டி.குமார் தலைமையில் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

# சாலவாக்கத்தில் முதல்வர் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்! நல உதவிகள்!

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கி சிறப்புரை!

காஞ்சிபுரம், பிப். 28 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. சார்பில் திராவிட நாயகனின் 71-வது பிறந்த நாள் விழா - நிதி நிலை அறிக்கை விளக்கம் - கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மற்றும் நல உதவிகள் வழங்கும் விழா நாளை (29-1.2024 - வியாழன்) மாலை 5 மணிக்கு சாலவாக்கத்தில் ஒன்றியச் செயலாளர் டி.குமார் தலைமையில் எஸ்.கே.வெங்கடேசன் வரவேற்புரையில் நடைபெறுகிறது.

இதில் சக்திவேல்இ எஸ். ஆர்.அப்பாதுரை, ஐ.பாபுஷரீப், எஸ்.பி.நடராஜன், பி. வி.அழகப்பன், பி.சேகர், ஆர்.தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி., தொகுதி பார்வையாளர் ஜெ.பச்சையப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் உத்திரமேரூர் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், ஒன்றியக் குழுத் தலைவர் ஞா.ஹேமலதா, துணைத் தலைவர் கு.வசந்தி, கோ. சிவராமன், ப.சசிகுமார், என்.எஸ்.பாரிவள்ளல், கு.துரைவேல், என்.ரவி, ப. கார்த்திகேயன், பெ.மணி, த.சத்தியமூர்த்தி, எஸ்.ரத்தினமாலா, எஸ்.முரளிதரன்,

என்.எஸ்.ரவி, வி.ஞானசேகர், டி.தமிழ்வேந்தன், ஜெ.சுஜாதா, பி.வெ.பாலமுருகன், ஆர்.வெங்கடசுப்பிரமணி, வி.பாண்டியன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் பொற்பந்தல் பி.சுப்பிரமணி, நதியா கோபி, ஆர்.சந்திரா, ஆர்.கல்யாணசுந்தரம், த.அன்புராஜ், பவுன்சின்ராஜ், தீபாகாமராஜ், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர் க.வெங்கட்ராமன், டி.கோகுலகண்ணன், சு.பலராமன், செ.விஷ்ணு, ஆர். விஜயா, சு. .வீரம்மாள், மாசிலா கோபி, எஸ்.கௌரிநாதன், எ.தர்மராஜ்,

ஊராட்சி மன்றத்தலைவர்கள் பி.வெங்கடேசன், எ.தர்மராஜ், நாகம்மாள், மாரி, தா.சுந்திரமூர்த்தி, கே.கோதண்டராமன், சுதாலட்சுமி, செல்வகுமார், சுதாஜா ஜெயராமன், சற்குணம் மாதவன், பூங்கோதை சேட்டு, க.வெங்கட்ராமன், பொன்மொழிசுபாஷ், தேன்மொழி மணி, மஞ்சுளா முருகன், ஜெயகாந்தி முரளி, கோமளா ஐயப்பன், சுப்பம்மாள் தம்பிப்பெருமாள், ஏ.இ.பாலு, பி.சுப்பிரமணி, இந்திரா மோகன், கே.கார்த்திகேயன், பி.ராமச்சந்திரன், எஸ்.பிருந்தாவதி, கலைச்செல்வி, கோதண்டராமன், கே. முனுசாமி, எழிலரசி யுவராஜ், சாலவாக்கம் சிலை செயலாளர் கே.எம்.கே. வெங்கடேசன், எம்.கே. வெங்கடேசன். வெங்கடேசன், எம்.சிகாமணி, யு.ஐபுருல்லா ஷெரிப், கே.எஸ்.பாபு, டி.தேவதாஸ், கே.ரவி, ஆர். சரவணன் மற்றும் எஸ். கே.பாலகிருஷ்ணன், எஸ். கே.ஏழுமலை, எஸ்.வி.சுந்தரமூர்த்தி, விஜயபரமசிவம், ஏ.அரசு ஜி.சந்திரன், பொன் சங்கர்.திருநாவுக்கரசு, அர்ஜுனன், ஆர்.கல்யாணசுந்தரன், பி.கங்கப்பிள்ளை, டி. முத்து, ஜி.செலுத்தியான், வி.மனோகரன், எம்.ஆர்.

எம்.கமலக்கண்ணன், இ.எஸ்.கே.பாலாஜி, எஸ். பாலன், எஸ்.கோதண்டன், கே.லாரன்ஸ், பி. வெங்கடேசன், கே.விஜயன், டி. கோதண்டராமன், கே.விஜயபாபு, பி.கஜபதி, ஏ.காத்தவராயன்,

எம்.மோகனராமன், எம். பூபால், எஸ்.வி.கமலக்கண்ணன், கே.ரவிச்சந்திரன், வ.ரவீந்திரன், எம்.மணிவண்ணன், ஜெ.ரகு, டி. ஞானசேகர், எம்.கோவிந்தராஜ், க.பழனிவேல், சரண்யா அலெக்ஸ் பி.வி. குப்புசாமி, ஜெயமணி முருகேசன், பி.பாஸ்கர் இ. ஆனந்தவடிவேல், ஏ.பி.சுப்பிரமணி, எல்.லட்சுமணன், கே.எஸ்.ஜெயசங்கர், கே. எஸ்.சுந்தரம்,

எஸ்.பெருமாள், எம். பவுல்ராஜ், கே.பாலு ,இ. ஞானவேல், எம்.தங்கராஜ், எம்.முருகேசன், சி.ஏழுமலை, ஏ.வினோத், ஆர். மாரி, எஸ்.ஏழுமலை, இ. பாண்டியன், வி.ஞானசேகரன், டி.வீரமணி, டி.முருகன், ஆர்.சிவலிங்கம், இ.அன்னப்பன், கே.பாலாஜி, கே.பழனிவேல், கே.கைலாசம், பி.சுப்பிரமணி, எம்.அன்புராஜ் ,எல்.ரவி, டி. அன்பழகன், பி.மாரியப்பன், சி. பூபாலன், எஸ்.உதயகுமார் , ஆசண்முகம், ஆர்.ஜெயக்குமார், ஜெஜெய்சங்கர், எஸ். சர்தார், அலி வி.சங்க,ர் என். சிரஞ்சிவி, இ.பாஸ்கான், ஜி.கோட்டீஸ்வரன், எஸ். சக்யா, சுந்தமூர்த்தி, எஸ். செயலறிஞன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

ஈ.நந்தா நன்றி கூறுகிறார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (27.02.2024) நீர்வளம் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் புவியியல் மற்றும் சுரங்கத்துறைக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 29 உதவி புவியியலாளர்கள் பணியிடத்திற்கான நியமன ஆணையினையும், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட 4 அலுவலக உதவியாளர்கள் பணியிடத்திற்கான நியமன ஆணையினையும் வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர், க. பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் திருமதி பூஜா குல்கர்னி, கூடுதல் இயக்குநர் த. முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.